1973 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த ஓமியோபதி கல்லூரியில் குறைந்தது $4\frac{1}{2}$ அல்லது ஐந்து ஆண்டு காலம் படிக்க வேண்டும். நாலைந்து ஆண்டு காலப் படிப்பு என்ற காரணத்தால் விரிவான மருத்துவ மனை ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஓராண்டுக் காலப் படிப்பு என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. இன்றைக்கு ஏற்கெனவே மருத்துவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் பத்தாண்டுக் கால அளவுக்குப் பணியாற்றி இருப்பார்களானால் அவர்கள் பதிவு செய்யப்படுவார்கள். ஓமியோபதி சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு அண்மையில் ஓமியோபதி கவுன்சில் ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : ஓமியோபதி படிப்பை சிலர் 9 மாதங்களில் தபால் மூலமாகக் கற்று ஊசி போடுகிறார்கள். ஸ்டெதஸ் கோப் வைத்துப் பார்க்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் டயக்னஸ் செய்து பார்க்க முடியாத நிலையில் மக்களுக்கு மருந்து தருகிறார்கள். இதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள்ளாக பதிவு பெற்றவர்கள் என்ற நிலையிலுள்ள மருத்துவர்கள் தவிர மற்றவர்கள் இப்படி மருத்துவம் செய்யக்கூடாது என்று கவுன்சில் மூலமாக ஆணை பிறப்பிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

மாநில குடும்பநலத் திட்ட அமைப்பு

* 436 வினா.—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்ட அமைப்பில் (ஸ்டேட் பேமிலி பிளானிங் பீரோ) டெமோகிராபிக் செல் (Demographic Cell) எத்தனை ஆண்டுகளாக இயங்குகிறது?

(இ) இதில் எவ்வகைப்பட்ட அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்?

(உ) இதற்கு அனுமதிக்கப்பட்ட எல்லா அலுவலர்களுக்கும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சென்ற இரண்டு ஆண்டு காலமாக இயங்கி வருகிறது.

(இ) டெமோகிராபர், புள்ளிவிபர உதவியாளர்கள், புள்ளி விபர ஆய்வாளர், கம்ப்யூட்டர், (கணக்கர்) எழுத்தர், இளநிலை எழுத்தர்.

(உ) சோஷியல் சையன்டிஸ்ட் தவிர மற்ற எல்லா அலுவல் களுக்கும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த டெமோகிராபிக் செல் என்ன பணிகளைச் செய்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நாட்டிலே இப்போது மிக அதிக நெருக்கடியை உண்டாக்குகின்ற மக்கள் தொகைப் பெருக் கத்தைக் குறித்த புள்ளி விவரங்களையும், அதைக் கட்டுப்படுத்து வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறு வகையாக இருப்பதால் அதனுடைய தர விளைவுகள்பற்றியும் தனித் தனியாகப் புள்ளி விபரங்களை அவ்வப்போது சேகரித்துத் தருகிறது.

வெங்கல் கிராமத்திற்கு உயர்நிலைப்பள்ளி

* 437 வினு.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், வெங்கல் கிராமத்தில் அரிசன நலத் துறையின்கீழ், ஒரு உயர்நிலைப் பள்ளி துவக்குவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: வெங்கல் கிராமத்தில் அரிசன மக்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். கல்வித் துறையில் ஒரு பள்ளி தொடங்க வேண்டுமென்றால் 12,500 ரூபாய் பங்குத் தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது. அரிசன மக்களுக்காகப் பல்வேறு இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளில் துவக்கப்பட்டிருப்பது போல் இங்கு துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அரிசன மக்கள் அங்கு அதிகம் என்று சொல்வது தவறு. 3,085 மக்கள் தொகையில் அரிசன மக்கள் ஏறத்தாழ 1,700 பேர்தான் இருக்கிறார்கள். மாணவர்கள் தொகையில்கூட இப்போதுள்ள ஊராட்சி உயர்தர ஆரம்பப் பள்ளியில் 489 பேரில் 195 பேர்தான் அரிசன மாணவர்கள்